# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 203/மா/2023**

**நாள்: 05.09.2023**

திருமதி. S. அஜ்மாபீபி (எ) ஷகிலா
திருச்சி – 620 017. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
கோ- அபிஷேகபுரம் கோட்டம்.
திருச்சிராப்பள்ளி. – எதிர்மனுதாரர்

திருச்சி, தென்னூர் தெரு, பென்ஷனர் தெரு, மீர் அசனுல்லாஷா தர்கா காலனி, பு.க.எண்.39, ப.க.கதவு எண்.17/10ல் வசிக்கும் திருமதி. S. அஜ்மாபீபி (எ) ஷகிலா என்பவரின் 10.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.07.2023–ல் பெறப்பட்டு, 203/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சி, தென்னூர் தெரு, பென்ஷனர் தெரு, மீர் அசனுல்லாஷா தர்கா காலனி, பு.க.எண்.39, ப.க.கதவு எண்.17/10ல் வசிக்கும் திருமதி. S. அஜ்மாபீபி (எ) ஷகிலா என்பவரின் 10.07.2023 நாளிட்ட தனது மனுவில் :

நான் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திருச்சி மேற்கு தாலூகா, புத்தூர் கிராமம், கோ-அபிஷேகபுரம் கோட்டம், பென்ஷனர் தெரு, மீர் அசனுல்லாஷா காலனியில் உள்ள வீட்டை 28.06.2002 தேதியிட்ட எனது கணவர் சையது ஜமால் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திர எண்.2476/2002 மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறேன்.

மேற்படி வீடு எனது மாமியார் திருமதி. ஜஹருனிசா அப்துல் கரீம் பெயரில் மாநகராட்சி பதிவேட்டில் உள்ளது. மேற்படி திருமதி. ஜஹருனிசா அப்துல் கரீம் கடந்த 23.05.1992 தேதியில் காலம் சென்றுவிட்டார். எனது மாமனார் அப்துல் கரீம் 23.09.1999 தேதியில் காலம் சென்றுவிட்டார். எனது கணவர் சையத் ஜமால் மட்டுமே மேற்படி திருமதி ஜவஹருனிசா அவருக்கு வாரிசு ஆவார்.

நான் மேற்படி சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் அடைந்தவுடன் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அபிஷேகபுரம் அலுவலகத்தில் எனது பெயரில் பெயர் மாற்றம் செய்ய கடந்த 15.03.2016-ம் தேதியில் விண்ணப்பித்தேன். ஆனால் எனது மனு மீது எவ்வித நடவடிக்கையும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் எடுக்கப்படவில்லை. நான் எனது பெயரில் வரிமாற்றம் செய்யாததால் மாநகராட்சிக்கு வரி செலுத்த இயலவில்லை.

ஆகவே நான் தகவல் அறியும் உரிமை (RTI) சட்டத்தின் கீழ் எனது பெயர் மாற்ற மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து திருச்சி மாநகராட்சியில் 22.02.2018-ல் மனு செய்தேன். எனது மனுவிற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சரியாக பதில் தெரிவிக்காததால் கடந்த 22.03.2018 தேதியில் மாநில தகவல் ஆணையரிடம் மேல்முறையீடு செய்தேன்.

எனது மனு மாநில தகவல் ஆணையத்தில் வழக்கு எண்.S.A.No.3377/விசாரணை/C/2019 ஆக விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. மேற்படி வழக்கு விசாரணையில், திருச்சி மாநகராட்சி கோ. அபிஷேகபுரம் கோட்டம் உதவி ஆணையர் ஆஜராகி நான் பெயர் மாற்றம் கோரும் வீட்டிற்கு 31.03.2020 வரையிலான வீட்டு வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் ஆகியவற்றின் கூடுதல் ரூ.17,080/-யை செலுத்தினால் உடனடியாக பெயர்மாற்றம் செய்து தருவதாக மனுதாக்கல் செய்ததை ஏற்று மாநில தகவல் ஆணையம் 07.01.2020 தேதியில் தீர்ப்பளித்தது.

நான் 15.12.2020 தேதியில் வீட்டுவரி, குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு ஆகிய மூன்றிற்கும் தனித்தனியாக மீண்டும் ஒருமுறை பெயர் மாற்றம் கட்டணம் செலுத்தியதுடன், திருச்சி மாநகராட்சி கோரிய ரூ.17,080/- பணத்தையும் செலுத்தி உடனடியாக எனது பெயரில் பெயர் மாற்றம் செய்ய 15.12.2020 தேதியில் மீண்டும் மனு செய்தேன்.

நான் பலமுறை நேரிலும் மாநில தகவல் ஆணையர் கடிதம் எழுதியும் பெயர் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பித்தேன். பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜராக உத்தரவிட்ட மேலே கூறிய தொகையை செலுத்தியும், பின்பு எங்கள் தரப்பு மனுவை கடிதம் மற்றும் ஆவண ஆதாரங்களுடன் அனுப்பி இருந்தும் இதுநாள் வரை பெயர் மாற்றம் செய்யவில்லை.

எனது பெயரில் பெயர் மாற்றம் செய்யப்படாததால் என்னால் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய வரியை செலுத்த இயலவில்லை. இதனால் மாநகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், நிர்வாக பொறியாளர், மாநகராட்சி கோ.அபிஷேகபுரம் ஆணையர், மாநகராட்சி வரிகளின் பிரிவு ஆணையர், இளநிலை பொறியாளர், வரிவசூல் செய்யாமல் அனைவரும் தாங்கள் கடமையை செய்யாமல் கடந்த 10 ஆண்டுகளாக காலம் தாழ்த்தி வருவதுடன் நீதிமன்ற ஆணையையும் மீறி நடந்துள்ளார்.

மேற்படி தங்கள் அலுவலக வேலையை செய்யாமல் காலம் தாழ்த்தி எனக்கு 10 வருடங்களாக சொத்தை அனுபவிக்க இயலாமல் இருந்து வருகிறேன். ஆகவே மாநகராட்சி ஆணையர், நிர்வாக பொறியாளர், மாநகர பொறியாளர், உதவி ஆணையர் (வரி) உதவி ஆணையர் கோ.அபிஷேகபுரம், உதவி பொறியாளர்கள் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுத்து எனது பெயரில் பெயர் மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**6. இம்முறைமன்ற கடித நாள் 24.7.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 18.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரரின் பெயர் மாற்றம் தொடர்பான மனு மீது 18.8.2023 அன்று மனுதாரருக்கு உரிய செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் மனு திங்கள் கிழமை 21.8.2023 அன்று அவசர அவசியம் கருதி கலந்துகொள்ள வேண்டி இருப்பதால், நேரடி விசாரணைக்கு என் சார்பாக உதவி வருவாய் அலுவலர் திரு. எஸ். துரை அவர்கள் உரிய ஆவணங்களுடன் ஆஜராகி உரிய பதிவினை சமர்ப்பிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

**7. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ அபிஷேகபுரம் வார்டு எண் 51 மீர் அசனுல்லா ஷா தர்கா காலனி, பென்சனர் தெரு, பழைய கதவு எண் 17/10 புதிய கதவு எண் 39 கொண்ட வீட்டை எனது கணவர் சையது ஜமால் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திர எண் 2476/2022 மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறேன். மேற்கண்ட வீடு எனது கணவரின் தாயார் திருமதி ஜவஉறருன்னிசா அப்துல் கரீம் பெயரில் மாநகராட்சி பதிவேட்டில் உள்ளது. எனது கணவரின் தாயார் ஜவஉறருன்னிசா 23.5.1992ல் இறந்தவிட்ட நிலையில், அவரது ஒரே வாரிசான எனது கணவர் எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி, மேற்கண்ட எனது வீட்டிற்கான சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி எனது பெயரில் பெயர் மற்றம் செய்திட 15.3.2016ம் தேதியில் விண்ணப்பித்திருந்தேன்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் பெயர் மாற்றம் செய்யாததையடுத்து, மாநில தகவல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சொத்து வரி கோரும் எனது வீட்டிற்கு 31.3.2020 வரை வீட்டு வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் ஆகியவற்றிற்கு ரூபாய் 17,080/—ஐ செலுத்துமாறு மாநகராட்சி உதவி ஆணையர் கோரியதையடுத்து 15.12.2020 அன்று மேற்கண்ட தொகையை உரிய ஆதார ஆவணங்களுடன் செலுத்தி சொத்து வரி பெயர் மாற்றம் செய்யக் கோரினேன். ஆனால் மாநகராட்சியால் இது நாள் வரை எனது பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்படவில்லை.

எனவே எனது கணவர் எனக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திர எண் 2476/2002 மூலம் நான் அனுபவித்து வரும் எனது வீட்டின் சொத்து வரியை எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

> "திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ அபிசேகபுரம் வார்டு எண் 51 மீர் அசனுல்லா ஷா தர்கா காலனி, பென்சனர் தெரு பழைய கதவு எண் 17/10 புதிய கதவு எண் 39 ல் வசிக்கும் மனுதாரருக்கு அவரது பெயர் சொத்து வரி கேட்பு பெயர் மாற்றம் செய்திட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்திற்கு அளித்த மனுவையொட்டி, மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, 18.8.2023 நாளிட்ட சொத்து வரி பெயர் மாற்ற உத்தரவு இன்று (21.8.2023) மனுதாரருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**9. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் திருமதி S. அஜ்மாபீவி என்ற ஷகிலா பேகம் தனது கணவர் திரு. சையத் ஜமால் என்பவர் திருச்சிராப்பள்ளி, புத்தூர் கிராமம், கோ. ஆபிஷேகபுரம் கோட்டம், பென்ஷனர் தெரு, மீர் அசனுல்லாஷா காலனியில் உள்ள வீட்டை தன் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாகவும், அதனால் எல்லா ஆவணங்களையும் திருச்சி மாநகராட்சி கோ. ஆபிஷேகபுரம் கோட்டம் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தும், தனது பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம் 15.12.2020ல் அளித்தும் இதுவரை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ. அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவித்து தனது மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மதுதாரர் தனது கணவர் மேற்குறிப்பிட்ட வீட்டை செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தனக்கு எழுதி வைத்தப்பிறகு சொத்துவரி பெயர் மாற்றம் கோரி 15.3.2016 தேதியன்று விண்ணப்பம் அளித்துள்ளதும், அதன்பிறகு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ. அபிஷேகபுரம் கோட்டம் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்திடம் முறையீட்டு, அவ்வாணையத்தில் ஒரு மாதத்திற்குள் பெயர் மாற்றம் செய்யப்படும் என்ற உறுதிமொழி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ, அபிஷேகபுரம் கோட்டம் அலுவலர்கள் அளித்த பிறகும் திருச்சி மாநகராட்சி கோ. அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் அறியமுடிகிறது. மேலும், மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு 18.8.2023 அன்று சொத்து வரி பெயர் மாற்றம் செய்த உத்திரவு மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 2016 ஆண்டு முதல் சொத்துவரி பெயர் மாற்றம் கோரி மனு அளித்தும், திருச்சிராப்பள்ளி கோ. அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மனுதாரர் நிலுவைத்தொகையான ரூ 17,080/-ஐ செலுத்தும்பட்சத்தில் பெயர் மாற்றம் ஒரு மாதத்திற்குள் செய்யப்படும் என்று உறுதி அளித்ததன் பெயரில் மனுதாரர் நிலுவைத் தொகையான ரூ.17,080/-ஐ 15.12.2020ல் செலுத்திய பிறகும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ. அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல்,

இம்முறைமன்றம் மனுதாரின் மனு மீது 21.8.2023 அன்று விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர்தான் அதாவது 2½ வருடங்கள் கடந்து 18.8.2023 அன்று சொத்துவரி பெயர் மாற்றம் செய்துயிருப்பது திருச்சிராப்பள்ளி கோ, அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்கள், உதவி ஆணையர் உட்பட தங்கள் கடமையை சரிவர செய்பவில்லை என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்டவிரும்புகிறது. இவ்வளவு காலதாமதாக ஒரு நேர்வில் நடவடிக்கை எடுக்கும் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். 2½ வருடங்கள் கடந்து இம்முறைமன்றம் உத்திரவிட்ட பின்னர் மனுதாரருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு திருச்சிராப்பள்ளி கோ, அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்கள் உள்நோக்கத்துடன் செயல்பட்டதாகவும், வேண்டுமென்றே காலதாமதம் செய்துள்ளதாகவும் இம்முறைமன்றம் கருதுகிறது. திருச்சி மாநகராட்சி கோ-அபிஷேகபுரம் கோட்ட அலுவலர்களின் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் 2015 மற்றும் விதிகளின்படி குறிப்பாக

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு: 12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manager, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அடிப்படையில் இம்முறை மன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

மனுதாரர் 2016 ஆண்டே சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பம் அளித்தும், தமிழ்நாடு தகவல் ஆணையத்திடம் ஒரு மாதத்திற்குள் பெயர் மாற்றம் செய்து தருவதாக உறுதி அளித்தும், இம்முறைமன்றம் 21.8.2023 அன்று விசாரணைக்கு உத்திரவிட்டப்பின்னர் சில நிபந்தனைகளுடன் 2½ வருடங்கள் காலதாமதாக சொத்து வரி பெயர் மாற்றம் செய்து தங்கள் பணியில் மெத்தனமாகவும், அலட்சியமாகவும் பணியாற்றிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

கோ. அபிஷேகபுரம் கோட்ட அலுவலக உதவி ஆணையர் உட்பட சம்பந்தப்பட்டட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்மறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5- ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. S. அஜ்மாபீபி (எ) ஷகிலா பேகம்,
   க/பெ. S.K. சையது ஜமால்,
   ப.கதவு எண்.17/10, பு.க.எண்.39,
   பீர் அசனுல்லாஷா தர்கா காலனி,
   பென்ஷனர் தெரு, நென்னூர் தெரு,
   திருச்சி – 620 017.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. உதவி ஆணையர் (பொ),
   வார்டு குழு அலுவலகம் - 5,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   கோ- அபிஷேகபுரம் கோட்டம்.
   திருச்சிரரப்பள்ளி.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

   *To ensure the complaince of this Forum order.*
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்